# தொழில்நுட்பக் கல்வித்துறை

## <u>மக்கள் சாசனம்</u>



**மானியக் கோரிக்கை எண்.20**
**உயர் கல்வித் துறை**

**திரு. பி. பழனியப்பன்,**
**உயர்கல்வித்துறை அமைச்சர்**

**தமிழ்நாடு அரசு**

# 2015–2016

## தொழில்நுட்பக் கல்வித்துறை

## மக்கள் சாசனம்


| அத்தியாயம் | உள்ளடக்கம் | பக்கம் எண். |
|---|---|---|
| I | **தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்** | 1 |
| II | **பொறியியல் கல்லூரிகள் குறித்த விவரம்** | 10 |
| III | **பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் குறித்த விவரம்** | 16 |
| IV | **வணிகப் பயிலகங்கள் குறித்த விவரம்** | 21 |
| இணைப்பு – 1 | **பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியின் 2015–2016–ம் ஆண்டிற்கான கல்வி நிகழ்வுகள் நாள்காட்டி** | 22 |
| இணைப்பு – 2 | **தொழில்நுட்பக் கல்வி இயக்கக அலுவலர்களின் படிநிலை** | 24 |

# I – தொழில்நுட்பக் கல்வித் துறை

மக்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான வெளிப்படையான நிர்வாகத்தை அமைத்திடும் வகையில், மாணவர்கள் நலன்கருதியும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் கீழ்க்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வியக்ககத்தால் வெளியிடப்படுகிறது.

## 1.0 தொழில் நுட்பக் கல்வி இயக்கக உருவாக்கம்

மாநில தொழிற்கல்வி ஆலோசணை நிலைக்குழுவின் பரிந்துரைப்படி 1957–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14–ஆம் நாள், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது. தொழில் நுட்பக் கல்வியில் பொறியியல் பட்டம் மற்றும் பட்டய நிலையில் தரமான கல்வியை வழங்கும் பொருட்டு தமிழக அரசு சீரிய முயற்சி எடுத்து வருகின்றது. இத்துறையானது தமிழக அரசு உயர்கல்வித்துறை கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டுவருகிறது.

## 1.1 தமிழகத்தில் உள்ள தொழில்நுட்பப் பயிலகங்களின் எண்ணிக்கை

2014–15-ம் கல்வியாண்டில் நிலைத்தபடி, தமிழகத்தில் 10 அரசு பொறியியல் கல்லூரிகளும், 3 அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகளும், 17 அண்ணா பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகளும் மற்றும் 546 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் தொழில்நுட்பக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

மேலும், 41 அரசு பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளும், 34 அரசு நிதியுதவி பெறும் பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளும், 3 இணைவு வகை தொழில் நுட்பக் கல்லூரிகளும், 1 திரைப்படப் பயிற்சி பயிலகமும், 1 பிராந்திய தொழிலாளர் கல்வி பயிலகமும், 15 உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பப் பயிலகங்களும் மற்றும் 414 சுயநிதி பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளும் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன.


## 1.2 தொழில்நுட்பக் பயிலகங்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்

### 1.2.1 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்

2011–12, 2012–13, 2013–14 மற்றும் 2014–15–ம் ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை **அட்டவணை 1.1**–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.1**
**தமிழகத்தில் உள்ள பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை**

| வரிசை எண். | கல்வியாண்டு | அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் | அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் | இணைப்புப் பயிலகங்கள் (அரசு) | பிராந்திய தொழிலாளர் கல்வி பயிலகம் | எம்.ஜி.ஆர். திரைப்படப் பயிற்சிப் பயிலகம் | உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பப் பயிலகங்கள் | சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் | மொத்தம் | புதியதாக துவங்கப்பட்ட பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | அரசு | சுயநிதி |
| 1 | 2011-12 | 30 | 34 | 3 | 1 | 1 | 15 | 380 | 464 | – | 15 |
| 2 | 2012-13 | 30 | 34 | 3 | 1 | 1 | 15 | 395 | 479 | – | 15 |
| 3 | 2013-14 | 41 | 34 | 3 | 1 | 1 | 15 | 406 | 501 | 11 | 11 |
| 4 | 2014-15 | 41 | 34 | 3 | 1 | 1 | 15 | 414 | 509 | – | 8 |





படம் 1.1 – தமிழகத்தில் உள்ள பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கை

### 1.2.2. பொறியியல் கல்லூரிகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்

2011–12, 2012–13, 2013–14 மற்றும் 2014–15–ம் ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை, **அட்டவணை 1.2**–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 1.2**
**தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை**

| வ. எண். | கல்வி ஆண்டு | அரசு பொறியியற் கல்லூரிகள் | அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் | அண்ணா பல்கலைக் கழக இணைவு பெற்ற பொறியியற் கல்லூரிகள் | சுயநிதி பொறியியற் கல்லூரிகள் | மொத்தம் | புதியதாக துவங்கப்பட்ட பொறியியல் கல்லூரிகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | அரசு | சுயநிதி |
| 1 | 2011–2012 | 6 | 3 | 18 | 498 | 525 | – | 35 |
| 2 | 2012–2013 | 7 | 3 | 18 | 525 | 553 | 1 | 30 |
| 3 | 2013–2014 | 10 | 3 | 18 | 541 | 572 | 3 | 15 |
| 4 | 2014–2015 | 10 | 3 | 17 | 546 | 576 | – | 8 |




படம் 1.2 – தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை

## 1.3 நாள்காட்டி நிகழ்வுகள்

### 1.3.1. பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள்

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் கல்வி நிகழ்வுகள் குறித்த விவரம் ஒவ்வொரு கல்வியாண்டு துவக்கத்திலும் தொழில்நுட்பக் கல்வி இயக்கக இணையதளத்தில் (www.tndte.com) மாணவர்களின் நலனுக்காக வெளியிடப்படுகின்றது. 2015–2016–ம் கல்வியாண்டிற்கான கல்வி நிகழ்வுகள் குறித்த விவரம் **இணைப்பு–1**–ல் அளிக்கப்பட்டுள்ளது.

### 1.3.2. பொறியியல் கல்லூரிகள்

அண்ணா பல்கலைக்கழகத்தில் இணைவு பெற்ற அனைத்து பொறியியற் கல்லூரிகளின் கல்வி நிகழ்வுகள் குறித்த விவரம் கல்வியாண்டு துவக்கத்தில் மாணவர்களின் நலன் கருதி அண்ணா பல்கலைக்கழகத்தால் வெளியிடப்படுகின்றது.

## 1.4 வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி பிரிவு

தொழில்நுட்பக் கல்வி இயக்கக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து தொழில்நுட்பப் பயிலகங்களிலும் வேலைவாய்ப்பு பிரிவு செயல்பட்டு வருகிறது. கல்லூரியின் மூத்த ஆசிரியர் ஒருவர் வேலைவாய்ப்பு அலுவலராக நியமிக்கப்படுகிறார். அந்த வேலைவாய்ப்பு அலுவலர் மாணவர்கள் வளாகத்திலேயே வேலைவாய்ப்பு பெறுதலுக்கான பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்கள் வளாக நேர்முகத் தேர்வுகளை எதிர்கொள்வதற்கு ஏதுவாக வேலைவாய்ப்பு பிரிவின் மூலம் பலவகைப்பட்ட மென்திறன் மற்றும் இதர பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

## 1.5 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியின் மூலம் சமுதாய மேம்பாட்டுத் திட்டம்

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியின் மூலம் சமுதாய மேம்பாட்டுத் திட்டம், மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் 2009–ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள 56 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு :

* தேவை அறிதலுக்கான பயிற்சி அளித்தல்
* திறன்மேம்பாட்டு பயிற்சிகள் அளித்தல்
* உகந்த தொழில்நுட்ப விவரங்களை அளித்தல்
* கிராமப்புற மக்களுக்கு தொழில் நுட்பம் தொடர்பான சேவைகளை அளித்தல்
* புதிய தொழில்நுட்ப முன்னேற்றம் குறித்த விவரங்களை அளித்தல்

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியும் 5 முதல் 10 கிராமப்புற விரிவாக்க மையங்களை நிறுவி, அந்த விரிவாக்க மையங்களில் பொது மக்கள் பயனடையும் பொருட்டு பலவகையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள், குறிப்பாக வீட்டு உபயோக மின்சாதனங்கள் பழுதுபார்த்தல், அலைபேசி பழுதுபார்த்தல், தண்ணீர் குழாய்களை பழுதுபார்த்தல், உயிரி எரிவாயு உபகரணம் தயாரித்தல், தண்ணீர் பரிசோதனை செய்தல், சூரிய ஒளித் தகடுகள் தயாரித்தல் ஆகியவற்றுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் தோராயமாக 50,000 பேர் பலவிதமான மரபு மற்றும் மரபு சார்பில்லாத குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சிகள் பெற்று பயனடைகின்றனர். கிராமப்புற மக்கள் சுய தொழில் ஒன்றை தொடங்குவதற்கு ஏதுவாக இத்திட்டத்தின் மூலம் தொழில் முனைவோருக்கான மேம்பாட்டு பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

## 1.6 நாட்டு நலப்பணித்திட்டம்

மாணவர்களின் ஆளுமை திறன் மேம்படுத்துவதை முழுமையான நோக்கமாக கொண்ட நாட்டு நலப்பணித்திட்டம், நம் மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 1983–84–ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் முதற்கட்டமாக 10 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 1000 மாணவர்களுடன் துவங்கப்பட்டது. தற்போது 43500 மாணவத் தொண்டர்களுடன் 328 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 435 அலகுகள் மூலம் நாட்டு நலத்திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டு நலத்திட்ட பணிகள் (1) தொடர் பணிகள் மற்றும் (2) சிறப்பு முகாம் பணிகள் என இருவகைப்படும். நாட்டு நலப்பணித்திட்டத்தில் இணைந்துள்ள மாணவர்கள் ஆண்டொன்றிற்கு 120 மணி நேரங்கள் வீதம் சமுதாய மேம்பாட்டிற்கான தொடர் பணிகளையும் மற்றும் தத்தெடுத்த கிராமத்தில் ஏழு நாட்கள் சிறப்பு முகாமிட்டு தேவையான பணிகளை மேற்கொள்கிறார்கள்.

## 1.7 தொழில் நுட்பக் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு

2014–15–ம் நிதியாண்டிற்கான திட்டப் பணிகளுக்காக ரூ.75121.20 இலட்சமும் மற்றும் திட்டமில்லா பணிகளுக்காக ரூ.37525.19 இலட்சமும் தமிழக அரசால் தொழில்நுட்பக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.8 புத்தாக்கப் பயிற்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் பயிலரங்குகள் ஏற்பாடு செய்தல்

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் நலன்கருதி கோடைகாலம் மற்றும் குளிர்கால பருவ விடுமுறை காலங்களில் புத்தாக்கப் பயிற்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன. மேலும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம், மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை மற்றும் பல்கலைக்கழக அங்கீகாரக் குழு நடத்தும் பயிற்சிகளில் ஆசிரியர்கள் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

## 1.9 தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் நிர்வாக அமைப்பு

தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் இவ்வியக்ககத்தின் தலைமைப் பொறுப்பை வகித்து வருகிறார். தொழில்நுட்பக் கல்வி இயக்கக அலுவலர்களின் படிநிலை (Hierarchy) படம் **இணைப்பு – 2**ல் அளிக்கப்பட்டுள்ளது.

## 1.10. புதிய தொழில்நுட்பப் பயிலகம் துவங்குவதற்கான வழிமுறை

புதிய தொழில்நுட்பப் பயிலகம் (பொறியியல் கல்லூரிகள் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள்) துவங்க விரும்பும் பதிவு செய்யப்பட்ட சங்கம்/அறக்கட்டளை/தொழில் நிறுவனங்கள் அதற்குண்டான கட்டணத்தை (தற்போது ரூ.5,000/–) செலுத்தி அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தின் இணையதளத்தில் www.aicte-india.org பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியினை மாநில அரசு மற்றும் உரிய இணைவு பல்கலைக்கழகம் / வாரியத்திற்கு சமா்ப்பித்து அதற்கான ஒப்புதல் முத்திரையை பெறவேண்டும். மேற்படி விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியினை உரிய சான்றிதழ்கள் மற்றும் ஒப்புதல் முத்திரையுடன் சென்னையிலுள்ள, அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தின் வட்டார அலுவலகத்தில் சமா்ப்பிக்க வேண்டும்.

பொறியியல் கல்லூரிகள் மற்றும் பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகள் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், பல்கலைக்கழக / வாரிய இணைவு பெற வேண்டி முறையே அண்ணா பல்கலைக்கழகம் அல்லது தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். கல்லூரியின் நிலம், கட்டிடங்கள், ஆசிரியா்கள், பணியாளா்கள், உபகரணங்கள், கணிணிகள், அறைகலன்கள், நூலக புத்தகங்கள் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளை வல்லுநா் குழு ஆய்வு செய்து மேற்படி வசதிகள் அக்கல்லூரி பெற்றிருப்பின் இணைவு வழங்கப்படும்.

## 1.11 தன்னாட்சி தன்மை பெற்ற பயிலகங்கள் (அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பயிலகங்கள்)

### 1.11.1. தன்னாட்சி தன்மை பெற்ற பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள்

கீழ்க்காணும் **3** அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், **10** அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் தன்னாட்சி தன்மை பெற்றுள்ளன.

**அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள்**

1) மையப் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை
2) தமிழ்நாடு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, மதுரை
3) டாக்டா் தா்மாம்பாள் மகளிா் அரசினா் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை

**அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள்**

1) முருகப்பா பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை
2) பி.எஸ்.ஜி. பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்,
3) ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்
4) நாச்சிமுத்து பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, பொள்ளாச்சி
5) தியாகராஜர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, சேலம்
6) சேஷசாயி தொழில்நுட்பப் பயிலகம், திருச்சி
7) விருதுநகர் எஸ். வெள்ளைச்சாமி நாடார் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, விருதுநகர்
8) பி.ஏ.சி. ராமசாமி ராஜா பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, ராஜபாளையம்
9) சங்கர் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, திருநெல்வேலி
10) பெரியார் நூற்றாண்டு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி, தஞ்சாவூர்

## 1.11.2. தன்னாட்சி தன்மை பெற்ற பொறியியல் கல்லூரிகள்

கீழ்க்காணும் 3 அரசு பொறியியல் கல்லூரிகளும், 3 அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகளும் தன்னாட்சி தன்மை பெற்றுள்ளன.

**அரசு பொறியியல் கல்லூரிகள்**

1) அரசு தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்
2) அரசு பொறியியல் கல்லூரி, சேலம்
3) அழகப்பா செட்டியார் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, காரைக்குடி

**அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள்**

1) பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்
2) கோயம்புத்தூர் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்
3) தியாகராஜர் பொறியியல் கல்லூரி, மதுரை

## 1.12 தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கு சிறுபான்மை தகுதி வழங்குதல்

அரசாணை (நிலை) எண்.270, உயர்கல்வித் (ஜே1) துறை நாள் 17.6.1998 மற்றும் அரசாணை (நிலை) எண்.386, உயர்கல்வித் (ஜே1) துறை நாள் 11.12.2006–ன் படி, ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசால் கல்லூரிகளுக்கு சிறுபான்மை தகுதி வழங்கப்பட்டு வருகிறது.

சிறுபான்மை கல்லூரிகளில், நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் 50% சிறுபான்மை மாணவர்களைக் கொண்டு நிரப்பிக்கொள்ளப்படுகிறது. மீதமுள்ள 50% மாணவர் சேர்க்கையை பொதுப் பிரிவிலிருந்து நிரப்பிக்கொள்ளப்படுகிறது. ஒரு வேளை, 50% சிறுபான்மையினருக்கான இடங்களை நிரப்ப இயலாதபட்சத்தில், அந்த நிரப்பப்படாத

இடங்களை மற்ற மாணவர்களைக் கொண்டு நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பிக்கொள்ளப்படுகிறது.

**1–8–2015–**ல் நிலைத்தபடி அரசு, **115** பொறியியல் கல்லூரிகளுக்கும் மற்றும் **2** பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கும் சிறுபான்மைத் தகுதி மதம் / மொழிவாரியாக வழங்கப்பட்டுள்ளது.

## 1.13. தொழில் நுட்பப் பயிலகங்களுக்கு ஆசிரியர் தேர்வு

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் அரசுப் பயிலகங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுகின்றனர்.

அரசு நிதியுதவி பெறும் பயிலகங்களில், அப்பயிலக ஆட்சிக் குழுவினரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஆசிரியர் தேர்வாணைக்குழு மூலம் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் அனுமதி பெற்ற பின்னர் பணி நியமன ஆணை வழங்கப்படுகிறது.

### 1.13.1 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு அளிக்கப்படும் சம்பள விவரம்

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படுகிறது. ஏனைய பணியாளர்களுக்கு மாநில அரசின் நடைமுறையில் உள்ள ஊதியம் வழங்கப்படுகிறது.

## 1.14 தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இழைக்கப்படும் பகடிவதைக்கு (Ragging) எதிரான நடவடிக்கை எடுத்தல் குறித்து

தமிழ் நாட்டில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் (பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி) நடைபெறும் பகடிவதையை (Ragging) தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் அனைத்து தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர்களுக்கும் தக்க அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

‘பகடிவதை தடுப்பு செயல் மற்றும் விதிமுறைகள்’ அடங்கிய ஆணையின் நகலினை மாணவர்கள் அறிதல் பொருட்டு கல்லூரியின் அனைத்து அறிவிப்பு பலகைகளிலும் காட்சியிடப்பட்டு அறிவிப்பு செய்து பகடிவதையில் ஈடுபடுபவர்களுக்கான தண்டனை குறித்த முழு விவரங்களையும் மாணவர்கள் அறிதலுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்லூரி முதல்வர்களுக்கு ஆண்டுதோறும் உத்தரவிடப்படுகிறது. மேலும், பகடிவதை போன்ற தீய செயல்களில் ஈடுபடாத வண்ணம் அம்மாணவர்களுக்கு கல்வி ஆலோசகர் மூலம் தகுந்த அறிவுரைகள் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

பகடிவதை தொடர்பாக ஏதேனும் புகார் மனு மாணவர்களிடமிருந்து பெறப்படும் பட்சத்தில், கல்லூரி முதல்வர்கள், பகடிவதை தடுப்பு விதிகளின்படி உரிய நடவடிக்கை

உடனடியாக எடுக்குமாறும் மற்றும் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

மாணவர்களிடையே நிலவும் பகடிவதை எனும் கொடுஞ்செயலை முழுமையாக வேரறுக்கும் பொருட்டு (i) தமிழ்நாடு, பகடிவதை தடுப்பு விதி எண்.7, ஆண்டு 1977–ன் நகல், (ii) அரசாணை (நிலை) எண்.366, உயர்கல்வி (ஜி1) துறை, நாள் : 26–7–1999–ன் வாயிலாக வெளியிடப்பட்டுள்ள விதிகளின் நகல், (iii) அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி குழுமம், புதுடில்லி, 1–7–2009–ன் நாளிட்ட அறிக்கையின் நகல் மற்றும் (iv) பல்கலைக்கழக மானியக் குழு, புதுடெல்லி அறிக்கையின் நகல் ஆகியவை இத்துறையின் இணையதளத்தில் (www.tndte.com) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 1.15 தொழில்நுட்பப் பயிலக மாணவர்களின் குறைகளை நிவர்த்தி செய்தல்

மாணவர்களிடமிருந்து பெறப்படும் குறை நிவர்த்தி செய்தலுக்கான முறையீடுகள் மற்றும் கல்லூரி உள்கட்டமைப்பு வசதியின்மை பற்றி இவ்வியக்ககத்தில் பெறப்படும் புகார்கள் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் கல்லூரி நிர்வாகத்தினருக்கு ஆணை வழங்கப்படுகிறது.

# II – பொறியியல் கல்லூரிகள் குறித்த விவரம்

2014–15–ம் கல்வியாண்டில், மொத்தம் 576 பொறியியல் கல்லூரிகள் பல்வேறு பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளில் இளநிலை மற்றும் முதுநிலை பொறியியல் படிப்புகளை வழங்கி வருகின்றன.

## 2.1 பொறியியற் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைமுறை விவரம்

### 2.1.1. பொறியியற் கல்லூரிகளில் முதலாமாண்டு பி.இ. / பி.டெக். / பி.ஆர்க் பட்ட வகுப்புகளில் மாணவர் சேர்க்கை

தமிழ்நாட்டில், அண்ணா பல்கலைக்கழக இணைவு பெற்ற பொறியியற் கல்லூரிகளில், முதலாமாண்டு பி.இ. / பி.டெக். / பி.ஆர்க். பட்டப் படிப்புகளுக்கு அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு, ஒற்றை சாளர கலந்தாய்வு, அண்ணா பல்கலைக்கழகத்தால் தமிழ்நாடு பொறியியற் சேர்க்கை பிரிவு மூலம் நடத்தப்படுகிறது. இக் கலந்தாய்வு முறையில் மாணவர்கள் சேர்க்கை இடங்களுக்கான விகிதாச்சார விழுக்காடு விவரங்கள் அட்டவணை – 2.1.ல் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை – 2.1**

**பி.இ / பி.டெக் / பி.ஆர்க் பட்டப் படிப்புகளுக்கு ஒற்றைச் சாளர கலந்தாய்வு முறையில் மாணவர்களுக்கான செயற்கை ஒதுக்கப்பட்ட மாணவர் சேர்க்கை இடங்கள்**

| வ.எண் | வகை | | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | அரசு பொறியியல் கல்லூரிகள் | | 100 |
| 2 | அரசு உதவி பெறும் கல்லூரிகள் | அரசு உதவி பெறும் பாடப் பிரிவுகள் | 100 |
| | | சுயநிதி பாடப்பிரிவுகள் | 70 |
| 3 | சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | சிறுபான்மை அல்லாத | 65 |
| | | சிறுபான்மை | 50 |

தமிழகத்தில், அண்ணா பல்கலைக் கழக இணைவு பெற்ற பொறியியற் கல்லூரிகளில் முதலாமாண்டு பி.இ. / பி.டெக். / பி.ஆர்க். பட்டப் படிப்பு சேர்க்கைக்கு நிர்வாக ஒதுக்கீட்டிற்கான மாணவர் சேர்க்கை குறித்து, தொழில் படிப்புகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கையை கண்காணிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் குழுவின் நெறிமுறைகளின்படி மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.

முதலாமாண்டு பி.இ. / பி.டெக். / பி.ஆர்க். பட்டப் படிப்பில் அரசு ஒதுக்கீட்டு இடங்களின் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்வு அறிவிப்புகள் ஆண்டுதோறும் மே மாதத்தில் அண்ணா பல்கலைக் கழக, தமிழ்நாடு பொறியியற் சேர்க்கை பிரிவின் மூலம் வெளியிடப்படும். மாணவர்கள் இதற்குரிய விண்ணப்பங்களை தமிழ்நாடு பொறியியற் சேர்க்கைப் பிரிவு, அண்ணா பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். ஒற்றைச் சாளர கலந்தாய்வு ஜுன் மாத கடைசி வாரத்தில் ஆரம்பித்து

ஜூலை மாதம் இறுதியில் முடிவு பெறும். அரசு ஒதுக்கீட்டிற்கான இடங்கள் மதிப்பெண் மற்றும் ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

### 2.1.2. பொறியியற் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு பி.இ. / பி.டெக். பட்டப் படிப்பு சேர்க்கை விவரங்கள்

தமிழகத்தில் அண்ணா பல்கலைக் கழக இணைவு பெற்ற பொறியியற் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு பி.இ. / பி.டெக். பட்டப் படிப்பு அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான சேர்க்கை கலந்தாய்வு மூலம் அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரி, காரைக்குடியில் நடத்தப்படுகிறது.

இது தொடர்பான அறிவிப்புகள் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் வெளியிடப்படும். ஒற்றைச் சாளர கலந்தாய்வு ஜூன் மாதம் கடைசி வாரத்தில் தொடங்கும். முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களைவிட கூடுதலாக 20% நேரடி இரண்டாமாண்டு சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுகிறது.

### 2.1.3 பொறியியற் கல்லூரிகளில் எம்.இ. / எம்.டெக். / எம்.ஆர்க் முதுகலை பட்டப் படிப்பு சேர்க்கை விவரங்கள்

தமிழகத்தில் அண்ணா பல்கலைக் கழக இணைவு பெற்ற பொறியியற் கல்லூரிகளில் முதலாமாண்டு எம்.இ. / எம்.டெக். / எம்.ஆர்க் பட்ட மேற்படிப்புகளுக்கு அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு, ஒற்றை சாளர கலந்தாய்வு, அண்ணா பல்கலைக்கழகத்தால் தமிழ்நாடு பொது சேர்க்கை பிரிவு மூலம் நடத்தப்படுகிறது. இதற்கான மாணவர் சேர்க்கை தமிழ்நாடு பொது சேர்க்கை (TANCA) மதிப்பெண் மற்றும் ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழகத்தில், அண்ணா பல்கலைக் கழக இணைவு பெற்ற பொறியியற் கல்லூரிகளில் முதலாமாண்டு எம்.இ. / எம்.டெக். / எம்.ஆர்க். பட்டப் படிப்பு சேர்க்கைக்கு நிர்வாக ஒதுக்கீட்டிற்கான மாணவர் சேர்க்கை குறித்து, தொழில் படிப்புகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கையை கண்காணிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் குழுவின் நெறிமுறைகளின்படி மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.

முதுகலை பட்டப் படிப்பில் (எம்.இ / எம்.டெக். / எம்.ஆர்க்) அரசு ஒதுக்கீட்டிற்கான இடங்களை நிரப்பிட அண்ணா பல்கலைக் கழகம், தமிழ்நாடு பொது சேர்க்கை பிரிவின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ஒற்றைச் சாளர கலந்தாய்விற்கான அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றது. மாணவர் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்வு ஒவ்வொரு ஆண்டும் மே/ஜூன் மாதத்தில் அண்ணா பல்கலைக் கழகம், தமிழ்நாடு பொது சேர்க்கை மூலம் அரசு ஒதுக்கீட்டிற்கான இடங்கள் நிரப்பப்படுகிறது. ஒற்றைச் சாளர கலந்தாய்வு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும். மாணவர்கள் பொறியியற் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை தமிழ்நாடு பொது சேர்க்கைப் பிரிவு (TANCA), அண்ணா பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அரசு ஒதுக்கீட்டிற்கான

இடங்கள் மாணவர்கள் பெறும் நுழைவுத் தேர்வு மதிப்பெண் (GATE / TANCET) மற்றும் ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

எம்.இ. / எம்.டெக். / எம்.ஆர்க் முதுகலை பட்டப் படிப்பைப் பொறுத்தவரையில் கல்லூரிகள் தாமாகவே முன்வந்து கூடுதல் அரசு ஒதுக்கீட்டிற்கு மாணவர் சேர்க்கை இடங்களை அளிக்க அனுமதிக்கப்படுகிறது.

### 2.1.4 பொறியியற் கல்லூரிகளில் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. முதுகலை பட்டப் படிப்பு விவரங்கள்

தமிழகத்தில் அண்ணா பல்கலைக் கழக இணைவு பெற்ற பொறியியற் கல்லூரிகளில் முதுகலை பட்டப் படிப்பு (எம்.பி.ஏ. / எம்.சி.ஏ.) சேர்க்கைக்கு அரசு ஒதுக்கீட்டிற்கான கலந்தாய்வு அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூரில் ஒவ்வொரு ஆண்டும் மே/ஜுன் மாதங்களில் நடத்தப்பட்டுவருகிறது.

தமிழகத்தில், அண்ணா பல்கலைக் கழக இணைவு பெற்ற பொறியியற் கல்லூரிகளில் முதலாமாண்டு எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. பட்டப் படிப்பு சேர்க்கைக்கு நிர்வாக ஒதுக்கீட்டிற்கான மாணவர் சேர்க்கை குறித்து, தொழில் படிப்புகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நிர்வாக ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கையை கண்காணிக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் குழுவின் நெறிமுறைகளின்படி மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.

எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. முதுகலை பட்டப் படிப்பிற்கு அரசு ஒதுக்கீட்டிற்கான இடங்களை ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் நிரப்பிட ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் அறிவிப்புகள் வெளியிடப்படும். ஒற்றைச் சாளர கலந்தாய்வு ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதம் மத்தியில் தொடங்கும். மாணவர்கள் எம்.பி.ஏ / எம்.சி.ஏ சேர்க்கைக்கான விண்ணப்பங்களை தமிழ்நாடு எம்.பி.ஏ / எம்.சி.ஏ சேர்க்கைப் பிரிவு, அண்ணா பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அரசு ஒதுக்கீட்டிற்கான இடங்கள் மாணவர் பெறும் தமிழ்நாடு பொது நுழைவுத் தேர்வு மதிப்பெண் (TANCET) மற்றும் ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. முதுகலை பட்டப் படிப்பைப் பொறுத்தவரையில் அரசு பொறியியல் கல்லூரிகளில் 100 %, அரசு உதவிப் பெறும் கல்லூரிகளில் 90 %, சிறுபான்மை அல்லாத சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 50% மற்றும் சிறுபான்மை சுய நிதி பொறியியல் கல்லூரிகளில் 30 % அரசு ஒதுக்கீட்டு இடங்களாக ஒற்றை சாளர கலந்தாய்வு முறை மூலம் நிரப்பப்படுகிறது.

## 2.2 பொறியியற் கல்லூரிகளில் 2015–16–ம் ஆண்டிற்கான கல்விக் கட்டண விவரங்கள்

தமிழக பொறியியல் கல்லூரிகளில் 2015–16ம் ஆண்டு கட்டண விவரம் **அட்டவணை 2.2–**ல் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2**

**2015–2016ம் வருட ஆண்டு கட்டண விவரங்கள்**

| பொறியியற் கல்லூரிகளின் வகைகள் | | பி.இ. / பி.டெக். / பி.ஆர்க். (ரூபாயில்) | | எம்.இ. / எம்.டெக். / எம்.ஆர்க். (ரூபாயில்) | | எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. / எம்.எஸ்.சி (ஒருங்கிணைந்த) (ரூபாயில்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தரச் சான்று பெறாத பாடப் பிரிவுகள் | தரச் சான்று பெற்ற பாடப் பிரிவுகள் | தரச் சான்று பெறாத பாடப் பிரிவுகள் | தரச் சான்று பெற்ற பாடப் பிரிவுகள் | தரச் சான்று பெறாத பாடப் பிரிவுகள் | தரச் சான்று பெற்ற பாடப் பிரிவுகள் |
| அரசு பொறியியற் கல்லூரிகள் | | 7,550 | 7,550 | 8,500/ | 8,500 | 8,500 | 8,500 |
| அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் | | 8,500 | 8,500 | 8,500 | 8,500 | 8,500 | 8,500 |
| அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் (சுயநிதி பாடப்பிரிவுகள்) | அரசு ஒதுக்கீடு | 40,000 | 45,000 | 50,000 | 60,000 | 30,000 | 36,000 |
| | நிர்வாக ஒதுக்கீடு | 70,000 | 70,000 | 50,000 | 60,000 | 30,000 | 36,000 |
| சுயநிதி பொறியியற் கல்லூரிகள் | அரசு ஒதுக்கீடு | 40,000 | 45,000 | 50,000 | 60,000 | 30,000 | 36,000 |
| | நிர்வாக ஒதுக்கீடு | 70,000 | 70,000 | 50,000 | 60,000 | 30,000 | 36,000 |

## 2.2.1 பொறியியற் கல்லூரிகளில் முதல் தலைமுறை பட்டதாரிக்கான கல்விக் கட்டண விவரங்கள்

பட்டதாரிகளே இல்லாத குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு அண்ணா பல்கலைக் கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் சேர்க்கை பெற்றால் தகுதியுள்ள முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு அரசாணை (நிலை) எண்.85, உயர்கல்வித் (ஜே2) துறை, நாள் : 16.4.2010–ல் குறிப்பிட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி முதல் தலைமுறை பட்டதாரிக்கான கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது.

முதல் தலைமுறை பட்டதாரிக்கான கல்விக் கட்டணச் சலுகை பெற மாணவர்கள் சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரியிடம் குடும்பத்தில் வேறு எவரும் பட்டதாரி இல்லைஎன்பதற்கான சான்றிதழ் பெற்று ஒற்றைச் சாளர கலந்தாய்வின் போது சமர்ப்பித்தல் வேண்டும். அரசு ஒதுக்கீட்டின் மூலம் சேர்க்கை பெற்ற மாணவர்களுக்கு முதல் தலைமுறை பட்டதாரிக்கான கல்விக் கட்டணத்தை தவிர்த்து அரசாணையில் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி மீதமுள்ள கட்டணத்தை மட்டுமே கல்லூரிகள் வசூலித்தல் வேண்டும். முதல் தலைமுறை பட்டதாரிக்கான கல்விக் கட்டணத் தொகை தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் முதல் தலைமுறை பட்டதாரிக்கான சான்றிதழ்கள் அரசாணையில் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி பரிசீலிக்கப்பட்டு பின்னர் சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு வழங்கப்படும். பல்வேறு வகையான பொறியியற் கல்லூரிகளில் முதல் தலைமுறை பட்டதாரிக்கான கல்விக் கட்டணச் சலுகை விவரங்கள்**அட்டவணை 2.3**–ல் அளிக்கப்பட்டுள்ளது.

| அட்டவணை– 2.3<br>பொறியியல் கல்லூரிகளில் முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கான கல்விக் கட்டண சலுகை விவரங்கள் | | |
|---|---|---|
| **கல்லூரிகளின் வகைகள்** | **கல்விக் கட்டணம் (ஆண்டொன்றிற்கு)** | **முதல் தலைமுறை பட்டதாரிக்கான கல்விக் கட்டணச் சலுகை** |
| அரசு பொறியியற் கல்லூரிகள் | ரூ.7,550/– | ரூ.2,000/– |
| அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் | ரூ.8,500/– | ரூ.4,000/– |
| அண்ணா பல்கலைக் கழக துறைகள் (வழக்கமான பாட முறை) மற்றும் அண்ணா பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள் | ரூ.15,320/– | ரூ.8,000/– |
| அண்ணா பல்கலைக் கழக துறைகள் (சுயநிதி பாட முறை) | ரூ.26,620/– | ரூ.15,000/– |
| சுயநிதி பொறியியற் கல்லூரிகள் (தரச் சான்று பெறாத பாடப் பிரிவுகள்) | ரூ.40,000/– | ரூ.20,000/– |
| சுயநிதி பொறியியற் கல்லூரிகள் (தரச் சான்று பெற்ற பாடப் பிரிவுகள்) | ரூ.45,000/– | ரூ.20,000/– |

## 2.3 பொறியியற் கல்லூரிகளில் இளநிலை பட்டப் படிப்பு மாணவர்களின் இடமாறுதலுக்கான நெறிமுறைகள்

மாணவர்கள் இடமாறுதல் 3, 5, 7 மற்றும் 9வது பருவமுறைக்கு (Semester) மட்டுமே வழங்கப்படும். இட மாறுதலுக்கான விண்ணபத்தினை இணையதளம் மூலமாகவே விண்ணப்பித்தல் வேண்டும். பொறியியற் கல்லூரிகளுக்கிடையே இட மாறுதல் கோரும் மாணவர்கள் தற்போது பயின்று கொண்டிருக்கும் கல்லூரி முதல்வரையே முதலில் அணுக வேண்டும். கல்லூரி முதல்வர் மாணவருடைய முழு விவரங்களையும், செமஸ்டர், பாடப்பிரிவு, மாறுதல் கோரும் கல்லூரியின் பெயர், வருகைப் பதிவு போன்ற விவரங்களை இணையதள வாயிலாக பதிவு செய்த பின்னர் மாணவர் எந்த கல்லூரிக்கு மாறுதல் கோருகிறாரோ அக்கல்லூரிக்கு விண்ணபத்தினை அனுப்பி வைக்க வேண்டும். மாணவரால் இடமாற்றம் கோரப்பட்ட கல்லூரியின் முதல்வர், அக்கல்லூரியின் காலியிட விவரங்கள் மற்றும் முதல்வரின் ஒப்புதலை இணையதள வாயிலாக பதிவு செய்த பின்னர், அவ்விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து மேலொப்பமிட்டு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு இணையதள வாயிலாகவே கல்லூரி மாறுதலுக்கான உத்தரவு வழங்கப்படும்.

எனினும், முதுகலை பட்டப் படிப்பிற்கு கல்லூரி இடமாறுதலுக்கு அனுமதி இல்லை.

## 2.4 பொறியியற் கல்லூரிகளில் இடைநிறுத்தம் செய்து பின்னர் மறுசேர்க்கை பெறுவதற்கான நெறிமுறைகள்

கல்வி இடைநிறுத்தம் செய்யப்பட்ட மாணவர்கள் எப்பருவத்தில் இடைநிறுத்தம் செய்யப்பட்டார்களோ அதே ஆண்டிலேயோ அல்லது அடுத்து வரும் ஆண்டிலேயோ

அதே பருவத்தில் கல்வியை தொடர உரிய விண்ணப்பித்தினை சமர்ப்பித்து மறுசேர்க்கை பெற வேண்டும்.

மறுசேர்க்கைக்கான (ஒற்றை மற்றும் இரட்டை பருவம்) விண்ணப்பம் இணையதள வாயிலாகவே விண்ணப்பித்தல் வேண்டும். கல்லூரி முதல்வர் அவர்கள் மாணவருடைய விவரங்கள் மற்றும் வருகைப் பதிவேட்டு விவரங்களை இணையதள வாயிலாகவே விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து மேலொப்பமிட்டு தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு அனுப்பி வைக்கும் பட்சத்தில் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு இணையதள வாயிலாகவே மறுசேர்க்கைக்கான உத்தரவு வழங்கப்படும்.

## 2.5 பொறியியற் கல்லூரிகளில் தேர்வு நடைமுறை மற்றும் மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல்

அனைத்து பொறியியல் கல்லூரிகளும் அண்ணா பல்கலைக்கழகத்தின் இணைவுப் பெற்ற கல்லூரிகளாகும். அனைத்து இணைவுப் பெற்ற பொறியியல் கல்லூரிகளுக்கும் அண்ணா பல்கலைக்கழகம் தேர்வுகள் நடத்தி, தேர்வு முடிவுகளை வெளியிட்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு பட்டம் வழங்குகிறது.

# III - பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் குறித்த விவரம்

2014–15–ம் கல்வியாண்டில், மொத்தம் 509 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் பல்வேறு பிரிவுகளில் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பட்டய படிப்பு மற்றும் சான்றிதழ் படிப்புகள் வழங்கி வருகின்றன.

## 3.1 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நடைமுறை விவரம்

### 3.1.1 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்புகளில் மாணவர் சேர்க்கை

தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் கோரி ஆண்டுதோறும் மே மாதத்தில் செய்தி தாள் மூலமாக அறிவிப்பு வெளியிடுகிறது.

அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் கோரி அந்தந்த கல்லூரிகளே ஆண்டுதோறும் மே மாதத்தில் செய்தி தாள் மூலமாக அறிவிப்பு வெளியிடுகிறது.

மாணவர்களின் விண்ணப்பங்களை அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளே மாணவர்களின் மதிப்பெண் மற்றும் ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் தேர்ச்சிப் பெற்றோர் பட்டியல் மற்றும் காத்திருப்போர் பட்டியலை தயார் செய்து வெளியிடுகின்றன. மாணவர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டய வகுப்பில் சேர்வதற்கு வயது வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

### 3.1.2 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப் படிப்புகளில் நேரிடையாக இரண்டாம் ஆண்டு மாணவர் சேர்க்கை

மேல்நிலைக் கல்வி (கல்வி அல்லது தொழிற்கல்வி) அல்லது பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று இரண்டாண்டு தொழில் பயிற்சிக் கல்வி பயின்ற மாணவர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நேரடியாக இரண்டாமாண்டு சேர தகுதியுடையவராவார். முதலாம் ஆண்டுக்கு ஒப்பளிப்பளிக்கப்பட்ட இடங்களில் 20 விழுக்காடு இடங்கள் நேரடி சேர்க்கை மூலம் நிரப்பப்படும்.

## 3.2 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2015–16–ம் ஆண்டுக்கான கல்விக் கட்டண விவரங்கள்

பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் 2015–2016–ம் ஆண்டுக்கான கல்விக் கட்டண விவரம் **அட்டவணை 3.1**–ல் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.1**

**பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டண விவரங்கள்**

| கல்லூரி வகை | கட்டண விவரம் | கட்டணம் | |
|---|---|---|---|
| அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி | கல்விக் கட்டணம் | – | அரசாணை நிலை எண். 259, உயர் கல்வி (பி2) துறை, நாள்: 26.6.2008-ன்படி, அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் ரூ.2,500/- செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. |
| | சிறப்புக் கட்டணம் | ரூ.1,000 / வருடத்திற்கு | |
| | வளர்ச்சிக் கட்டணம் | ரூ.1,000 / வருடத்திற்கு | |
| அரசு நிதியுதவி பெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி | கல்விக் கட்டணம் | ரூ.2,500 / வருடத்திற்கு | அரசாணை நிலை எண். 150, உயர் கல்வி துறை, நாள்: 28.5.2009-ன்படி, மாற்றுத் திறனாளி மாணவர்கள் / பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடியின மாணவர்கள் அனைவருக்கும் கல்விக் கட்டணம் ரூ.2,500/- செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. |
| | சிறப்புக் கட்டணம் | ரூ.1,000 / வருடத்திற்கு | |
| | வளர்ச்சிக் கட்டணம் | ரூ.1,000 / வருடத்திற்கு | |
| சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி | கல்விக் கட்டணம் | ரூ.15,000 / பருவத்திற்கு | கல்விக் கட்டண நிர்ணயக் குழு செயல்முறை ஆணை எண்,சிஎப்எப்/டிப்ளமோ–ஹோட்டல் மேனேஜ்மென்ட் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜி/ கட்டணங்கள் / 030/2015 நாள் 1.4.2015 |
| சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி (உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பப் பயிலகங்கள்) | கல்விக் கட்டணம் | ரூ.25,000 / பருவத்திற்கு | |

## 3.3 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்

அரசாணை (நிலை) எண்.1, சிறப்பு செயலாக்கத் திட்டத்துறை, நாள் : 3–6–2011–ன்படி தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினி வழங்கும் சிறப்பு திட்டம், மாணவர்களின் கணினி திறனை மேம்படுத்தும் பொருட்டு 2011–12–ம் கல்வியாண்டு முதல் அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பொறியியற் கல்லூரிகள் மற்றும் பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழ், 2013–14–ம் கல்வியாண்டு முதல் விலையில்லா மடிக்கணினிகள் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் முதலாண்டு மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

## 3.4 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் பயிலக மாறுதலுக்கான வழிமுறைகள்

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இரண்டாமாண்டு (மூன்றாம் பருவம்) மற்றும் மூன்றாமாண்டு (ஐந்தாம் பருவம்) பட்டயப்படிப்பு பயிலும் மாணவர்கள், ஒரு பயிலகத்திலிருந்து மற்றொரு பயிலகத்திற்கு இடமாறுதல் பெற, இடமாறுதல் பெறவிருக்கும் கல்லூரியில் குறிப்பிட்ட பாடப்பிரிவில் காலியிடம் இருக்கும்பட்சத்தில், சம்மந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களின் ஒப்புதலின்பேரில் இடமாறுதல் வழங்கப்படுகிறது.

## 3.5 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் மறுசேர்க்கைக்கான வழிமுறைகள்

ஒரு மாணவர் ஏதேனும் காரணங்களால் ஏதேனும் ஒரு பருவத்தில் படிப்பை இடைநிறுத்தம் செய்திருந்தாலோ அல்லது அந்த பருவத்திற்கான வாரியத் தேர்வு எழுதாமல் இருந்தாலோ, அடுத்த/பின்வரும் கல்வியாண்டில் அதே பருவத்தில் மறு சேர்க்கை பெற்று தங்கள் கல்வியைத் தொடர அனுமதி அளிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர் மறுசேர்க்கைக்கான உரிய விண்ணப்ப படிவத்தினை உரிய காலக்கெடுவிற்குள் இயக்கக இணையதளம் மூலம் (www.tndte.com) விண்ணப்பிக்க வேண்டும்.

மாணவர்கள் பருவ வாரியான தங்களது வருகைப்பதிவு விவரங்களை தேசிய தகவல் மைய (National Informatics Centre) இணையதளம் (http://intradote.tn.nic.in) மூலம் அறிந்து கொள்ளலாம்.

## 3.6 பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

அரசு பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தகுதியின் அடிப்படையல் கீழ்காணும் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினருக்கான (BC/MBC/DNC) கல்வி உதவித் தொகை
2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான (SC/ST) கல்வி உதவித் தொகை‘
3. சிறுபான்மையினருக்கான (Minority) கல்வி உதவித் தொகை

மேற்கண்ட கல்வி உதவித் தொகை பெற (BC/MBC/DNC/SC/ST) மாணவர்கள் கீழ்காணும் சான்றிதழ்களை கல்வி உதவித்தொகைக்கான விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

1. சான்றொப்பமிடப்பட்ட சாதிச் சான்றிதழின் நகல்
2. அண்மையில் பெறப்பட்ட அசல் வருமானச் சான்றிதழ்
3. சான்றொப்பமிடப்பட்ட 10–ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் நகல்
4. கடைசியாக பயின்ற பயிலகத்திலிருந்து பெறப்பட்ட அசல் வருகைச் சான்று
5. வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் (வங்கிக் கணக்கு எண். / எம்.ஐ.சி.ஆர். எண். / மற்றும் ஐ.எப்.எஸ்.சி எண்.)

மேற்கண்ட உதவித் தொகையுடன் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு கீழ்காணும் கல்வி உதவித் தொகைகள் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

1. பாதுகாப்புப் படையினரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை
2. முன்னாள் இராணுவத்தினருக்கான கல்வி உதவித் தொகை
3. பணியின்போது இறந்துவிட்ட அரசுப் பணியாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை.

மேலே குறிப்பிட்ட கல்வி உதவித் தொகைகளைத் தவிர, இதர கல்வி உதவித் தொகைகள், மாணவர்களின் தகுதியின் அடிப்படையில், அந்தந்த பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரி முதல்வர்களின் பரிந்துரையுடன் சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு நேரடியாக சமர்ப்பிக்கப்படுகிறது.

## 3.7 பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் தேர்வு நடத்துதல் மற்றும் மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல்

### 3.7.1 பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பட்டயத் தேர்வுகள் நடத்துதல்

ஆண்டுதோறும் சுமார் 4 இலட்சத்திற்கும் மேலான மாணவர்கள் தொழில்நுட்ப பட்டயத் தேர்வு எழுதுகிறார்கள். பட்டயத் தேர்விற்கான கால அட்டவணை, தேர்வுக் கட்டண விவரங்கள் முதலியன தொழில்நுட்பக் கல்வி இயக்கக இணையதளம் (www.tndte.com) மூலமாக தெரிந்துகொள்ளலாம். மேலும், மாணவர்களால் பூர்த்தி செய்யப்பட்ட தேர்விற்கான விண்ணப்ப படிவம் உரிய கட்டணச் செலுத்து சீட்டுடன் அந்தந்த பயிலக முதல்வரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தேர்வு வாரியத் தலைவரால் நியமிக்கப்பட்ட பறக்கும் படையினர் தேர்வு நடைபெறும் கல்லூரிகளில் தேர்வுகள் நியாயமான முறையில் நடத்தப்படுவது குறித்து ஆய்வு செய்கின்றனர். தேர்வு நடக்கும் போது தேர்வு விதிமுறைகளை மீறிய முறைகேடு செயல்களில் ஈடுபடும் மாணவர்களுக்கு விசாரணை நடத்தி, அவர்கள் தமது பக்க நியாயத்தினை எடுத்துரைக்க போதிய வாய்ப்பளித்து பின்னர், விசாரணை குழுவினரால் தேர்வு முடிவுகள் / தண்டனை விவரங்கள் வெளியிடப்படுகிறது. தேர்வு விடைத்தாள்கள், விடைத்தாள்களில் மாற்று எண் பதிவு செய்த பின்னர் தேர்வு மையங்களில் திருத்தப்படுகிறது. அகத்தேர்வு, செய்முறைத்தேர்வு மற்றும் புறத்தேர்வு மதிப்பெண்கள் இயக்ககத்திற்கு இணையத்தளவாயிலாக பெறப்படுகிறது. தேர்வு முடிவுகள் தொழில்நுட்ப இணையதளத்தின் மூலமாக (**www.tndte.com**) வெளியிடப்படுகின்றன.

தேர்வு வெளியான பின்னர், பட்டய தேர்வு சான்றிதழ்கள் மற்றும் மதிப்பெண் பட்டியல் அந்தந்த கல்லூரிகளுக்கு மாணவர்களுக்கு விநியோகிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

### 3.7.2 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டய தேர்வு விடைத்தாள்களின் மறுமதிப்பீடு

விடைத்தாள்கள் மறுமதிப்பீடு செய்ய விரும்பும் மாணவர்கள் தங்கள் பயிலும் / பயின்ற கல்லூரி முதல்வர்கள் மூலம் உரிய விண்ணப்பத்தினை சமர்ப்பிக்க வேண்டும். மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்த மாணவர்கள் குறித்த விவரங்கள் அந்தந்த கல்லூரிகளிலிருந்து இயக்கக இணையதளம் மூலம் பெறப்படுகிறது. மறுமதிப்பீட்டு முடிவுகள் பட்டயத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் வெளியிடப்படுகிறது.

### 3.7.3 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாற்று பட்டய சான்றிதழ் மற்றும் மாற்று மதிப்பெண் பட்டியல் வழங்குதல்

பட்டயச் சான்றிதழ் அல்லது மதிப்பெண் பட்டியல் காணாமல் போகும் பட்சத்தில் மாற்று பட்டய சான்றிதழ் அல்லது மாற்று மதிப்பெண் பட்டியல் பெற விரும்பும் மாணவர்கள் தங்கள் கல்லூரி முதல்வர்கள் மூலம், உரிய விண்ணப்பத்தினை இந்தியன் வங்கி இணையதள செலுத்துச் சீட்டுடன் (www.indianbank.in) விண்ணப்பிக்க வேண்டும். இது தொடர்பான விவரம் தமிழக அரசிதழில் வெளியிடப்பட்ட பின்னரே (Govt Gazette) மாற்றுப்பட்டயச் சான்றிதழ் / மதிப்பெண் பட்டியல் வழங்கப்படும்.

திருட்டு மற்றும் தொலைந்து போதல் மூலம் பட்டயச் சான்றிதழ் இழக்க நேரிட்டால், சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திடமிருந்து 'மீளப்பெற இயலவில்லை' என்னும் சான்றிதழ் பெற்று மேலே கூறப்பட்ட விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்,

தீ / வெள்ளம் மற்றும் இயற்கை பேரிடர் மூலமாக பட்டயச் சான்றிதழ்கள் இழக்க நேரிட்டால், சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடமிருந்து இதற்கான காரணம் குறித்து சான்றிதழ் பெற்று விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

### 3.7.4 பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பட்டயச் சான்றிதழ் குறித்த மெய்தன்மை சான்றளித்தல்

அரசு / வெளிநாட்டு தூதரகம் / தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து மாணவர்களது வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி சம்மந்தமாக பட்டயச் சான்றிதழ் குறித்த மெய்த்தன்மை கோரப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு மெய்த்தன்மை சான்றுகள் வழங்கப்படும். மெய்த்தன்மை கோரி அரசிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவதில்லை.

## IV – வணிகப் பயிலகங்கள் குறித்த விவரம்

### 4.1 வணிகப் பயிலகங்கள் துவங்க வழிமுறை

தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் பாடங்களில் பயிற்சி அளிக்கும் வணிகப் பயிலகங்கள் துவங்க தொழில்நுட்பக்கல்வி இயக்ககத்திடமிருந்து தற்காலிக மற்றும் நிலையான அனுமதி வழங்கப்படுகிறது. வணிகப் பயிலகம் துவங்க இத்துறையின் அனுமதி கோரப்படும் விண்ணப்பதாரர்களுக்கு விதிகள் மற்றும் கட்டுப்பாட்டு நெறிமுறைகள் வழங்கப்படுகிறது.

### 4.2 வணிகப் பயிலகத்தில் பயிற்றுநராக பணிபுரிய தேவைப்படும் தொழில் நுட்ப ஆசிரியர் தகுதிக்கான சான்றிதழ் வழங்குதல்

வணிகப் பயிலகத்தில் பயிற்றுநராக (TTC) பணிபுரிய, தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தால் வழங்கப்படும் தொழில் நுட்ப ஆசிரியருக்கான சான்றிதழ் பெறுதல் வேண்டும். இந்த சான்றிதழ் பெறுவதற்கான சேர்க்கை மற்றும் கல்விக் கட்டணம் ரூ.600/–ஐ தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்திற்கு செலுத்த வேண்டும்

### 4.3 வணிகப் பயிலகத்தில் தேர்வு நடத்துதல் மற்றும் சான்றிதழ் வழங்குதல்

தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் போன்ற வணிகத் தேர்வுகள் ஒவ்வொரு ஆண்டும் இருமுறை பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடத்தப்படுகிறது. அங்கீகாரம் பெற்ற வணிகப் பயிலகம் மூலம் கலந்து கொண்டு தேர்வில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட வணிகப் பயிலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். தனியாகத் தேர்வு எழுதிய மாணவர்களின் சான்றிதழ்கள் உரிய மாணவர்களுக்கே நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.

கணிணி மூலம் அலுவலக தன்னியக்க முறைக்கான சான்றிதழ் படிப்புக்கான தேர்வு ஆண்டுதோறும் ஜுன் மற்றும் டிசம்பர் மாதங்களில் நடத்தப்பட்டு வருகிறது.

தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் பாடங்களில் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு மறு கூட்டல், மாற்றுச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் சான்றிதழின் மெய்த்தன்மை ஆகியவை உரிய விதிகளின்படி விண்ணப்ப கட்டணம் செலுத்திய பின் வழங்கப்படுகிறது.

# இணைப்பு – 1 (1/2)

## பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியின் 2015–2016–ம் ஆண்டிற்கான கல்வி நிகழ்வுகள் நாள்காட்டி

DEPARTMENT OF TECHNICAL EDUCAITON,CHENNAI-25
POLYTECHNIC COLLEGES
CALENDAR OF EVENTS FOR THE ACADEMIC YEAR 2015- 2016 (TENTATIVE)

| GENERAL: | | |
|---|---|---|
| Re-Opening of Institutions after Summer Vacation | 01.06.2015 | MONDAY |
| Last date for payment of Tuition Fee without fine | 01.07.2015 | WEDNESDAY |
| Last Date for payment of Tuition Fee with fine | 10.07.2015 | FRIDAY |
| Commencement of I Year Full Time and Part Time Classes | 06.07.2015 | MONDAY |
| Last working day for the Odd Semesters (III , V & VII) | 18.09.2015 | FRIDAY |
| Last working day for the I Year Full Time and Part Time students | 16.10.2015 | FRIDAY |
| Commencement of Winter Vacation (31 Days) | 23.10.2015 | FRIDAY |
| **EVEN SEMESTER** | | |
| Re-Opening of Institution after Winter Vacation | 23.11.2015 | MONDAY |
| Last working day for the Even Semester II | 04.03.2016 | FRIDAY |
| Last working day for IV, VI and VIII | 11.03.2016 | FRIDAY |
| Commencement of Summer Vacation (39 Days) | 28.04.2016 | THURSDAY |
| Re-Opening of Institution after Summer Vacation | 06.06.2016 | MONDAY |
| **ADMISSIONS:** | | |
| **Re-Admission and Transfer:** | | |
| Last date for receipt of Application Forms for Re-Admission in IV & VI Sem | 30.12.2015 | WEDNESDAY |
| Last date for receipt of Institution Transfer Application Forms in III & V Sem | 09.06.2016 | THURSDAY |
| Last date for receipt of Application Forms for Re-Admission in III & V Sem | 09.06.2016 | THURSDAY |
| **Lateral Entry Admissions:** | | |
| Date of Release of Advertisement in News Paper | 03.05.2015 | SUNDAY |
| Date of Issue of Application forms | 04.05.2015 | MONDAY |
| Last date of Issue and Receipt of Application forms | 22.05.2015 | FRIDAY |
| Closing date for Lateral Entry Admission | 05.06.2015 | FRIDAY |
| Last date for receipt of B-Form from the Institutions | 10.06.2015 | WEDNESDAY |
| Commencement of Lateral Entry Certificate Verification of admitted students | 15.06.2015 | MONDAY |
| End of Lateral Entry Certificate Verification of admitted students | 10.07.2015 | FRIDAY |
| **I Year Full Time, Part Time and Special Reservation Admissions:** | | |
| Date of Release of Advertisement in News Paper | 17.05.2015 | SUNDAY |
| Date of Issue of Application forms | 18.05.2015 | MONDAY |
| Last Date of Issue and Receipt of Application forms | 05.06.2015 | FRIDAY |
| Special Reservation Counselling for Differently abled Candidates | 16.06.2015 | TUESDAY |
| Special Reservation Counselling for Sons / Daughters of Ex-Servicemen | 17.06.2015 | WEDNESDAY |
| Special Reservation Counselling for Sports Quota | 18.06.2015 | THURSDAY |
| Closing date for I year Full Time, Part Time & Post Diploma Admission | 01.07.2015 | WEDNESDAY |
| Last Date for the receipt of B-Form from Institutions | 06.07.2015 | MONDAY |
| Commencement of I Year Certificate Verification of admitted students | 20.07.2015 | MONDAY |
| End of I Year Certificate Verification | 02.09.2015 | WEDNESDAY |
| Commencement of I Year Part-Time & Post Diploma Certificate Verification of admitted students | 03.09.2015 | THURSDAY |
| End of I Year Part-Time & Post Diploma Certificate Verification | 04.09.2015 | FRIDAY |

# இணைப்பு – 1 (2/2)

## பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியின் 2015–2016–ம் ஆண்டிற்கான கல்வி நிகழ்வுகள் நாள்காட்டி

DEPARTMENT OF TECHNICAL EDUCAITON,CHENNAI-25
POLYTECHNIC COLLEGES
CALENDAR OF EVENTS FOR THE ACADEMIC YEAR 2015- 2016 (TENTATIVE)

| EXAMINATIONS: | | |
|---|---|---|
| **OCTOBER 2015 - II TO FINAL SEMESTER** | | |
| Last date for payment of Exam Fee without fine for October 2015 Exam for II sem to Final semester | 31.07.2015 | FRIDAY |
| Last date for payment of Exam Fee with fine of Rs. 100/- for October 2015 Exam for II sem to Final semester | 10.08.2015 | MONDAY |
| Last date for submitting NR & Practical panel & Staff list to DOTE | 14.08.2015 | FRIDAY |
| Last date for submitting Application - Tatkal - with penalty of Rs.500/- along with the Exam Fee at DOTE for October 2015 Exam | 14.09.2015 | MONDAY |
| Submission of II / III Year Tatkal Nominal roll / Exam Fee at DOTE | 16.09.2015 | WEDNESDAY |
| Issue of Hall Ticket / Practical panel for October 2015 Exam for II sem to Final semester | 28.09.2015 | MONDAY |
| Commencement of October 2015 Exams for II sem to Final semester | | |
| Practical | 29.09.2015 | TUESDAY |
| Theory | 13.10.2015 | TUESDAY |
| **NOVEMBER 2015 - I SEMESTER** | | |
| Last date for payment of November 2015 for I Semester exam fee without fine | 16.09.2015 | WEDNESDAY |
| Last date for payment of November 2015 for I Semester exam fee with fine of Rs.100/- | 22.09.2015 | TUESDAY |
| Submission of I Year Nominal roll / Exam Fee at DOTE | 05.10.2015 | MONDAY |
| Last date for submitting Application - Tatkal - with penalty of Rs.500/- along with the Exam Fee at DOTE for November 2015 Exam for I Sem | 08.10.2015 | THURSDAY |
| Submission of I Sem Tatkal Nominal roll / Exam Fee at DOTE | 12.10.2015 | MONDAY |
| Issue of Hall Ticket for November 2015 - I Sem Exams | 19.10.2015 | MONDAY |
| Commencement of November 2015 Exam for I Semester | 26.10.2015 | MONDAY |
| Commencement of Central Valuation for 2nd, 3rd Year and 1 Year | 16.11.2015 | MONDAY |
| Publication of results of October / November 2015 Exams | 21.12.2015 | MONDAY |
| **APRIL 2016 EXAMINATION - I SEMESTER TO FINAL SEMESTER** | | |
| Last date for payment of Exam Fee without fine for April 2016 Exam | 27.01.2016 | WEDNESDAY |
| Last date for payment of Exam Fee with fine of Rs.100/- for April 2016 Exam | 01.02.2016 | MONDAY |
| Last date for sending Question paper Requirement to DOTE | 05.02.2016 | FRIDAY |
| Last date for submitting NR & Practical panel & Staff list to DOTE | 05.02.2016 | FRIDAY |
| Last date for submitting Application with penalty of Rs. 500/- along with the Exam fee at DOTE for April 2016 Exam | 04.03.2016 | FRIDAY |
| Issue of Hall Ticket / Practical panel for April 2016 Exam | 18.03.2016 | FRIDAY |
| Commencement of April 2016 Exams | | |
| Practical | 19.03.2016 | SATURDAY |
| Theory | 05.04.2016 | TUESDAY |
| Commencement of Central Valuation | 02.05.2016 | MONDAY |
| Publication of results of April 2016 Exams | 31.05.2016 | TUESDAY |

**இணைப்பு - 2 (1/2)**

## தொழில்நுட்பக் கல்வி இயக்கக அலுவலர்களின் படிநிலை

(ORGANISATIONAL SETUP OF THE DIRECTORATE OF TECHNICAL EDUCATION, TAMILNADU)

